**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி அலுவலகத்தில் 12.02.2024ஆம் நாளன்று நடைபெற்ற சாதாரண கூட்டத்தின் தீர்மான நகல்**

**பொருள் எண்.01**

பவானிசாகர் ஊராட்சி ஒன்றிய கட்டுப்பாட்டிலிருந்து இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கி வந்த 2 ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளிகள் மற்றும் 1 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி என மூன்று பள்ளிகளும் ஆணையாளர், பவானிசாகர் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.2805/2022/அ2 நாள்.13.10.2022–ன் படி புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது. ஒப்படைக்கப்பட்ட விவரம் பின்வருமாறு.

| வ.எண் | பள்ளிகளின்பெயர் |
|---|---|
| 1 | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி,<br>ஜவஹர் மெயின் ரோடு, புன்செய்ப் புளியம்பட்டி |
| 2 | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி,<br>இராமநாதபுரம், புன்செய்ப் புளியம்பட்டி |
| 3 | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,<br>ஜெ.ஜெ.நகர், புன்செய்ப்புளியம்பட்டி |

தமிழ்நாடு ஆரம்பகல்வி சட்டம் 1920 பிரிவு 34–ல் அரசின் முன்அனுமதியுடன் நகர்மன்றங்கள் சொத்துவரியுடன் கல்விவரி விதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன் விகிதத்தினை பிரிவு35 (1)–ல் சொத்துக்களின் ஆண்டு மதிப்பில் 5 விழுக்காட்டிற்கும் மிகாமல் விதிப்பு செய்ய வரையறை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998 (திருத்தம்) 2022 நகர்புற உள்ளாட்சிகளில் 12.04.2023 முதல் நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. அதில் பிரிவு 80ல் நகர்மன்றங்கள் கல்வி வரி விதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.. எனவே பிரிவு 91–ல் சொத்து வரி ஆண்டு விகிதத்தில் 5% மிகாமல் விதிப்பு செய்ய வரையறை செய்யப்பட்டுள்ளதால் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் வசூலிக்கப்படும் சொத்துவரியுடன் உரிய சதவீத நிதிக்கூறினை (Component) கல்விநிதிகணக்கில் நிர்ணயம் செய்யப்பட வேண்டிய விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | பொதுக்காரியங்களுக்காக | 2.50% |
| 2 | தண்ணீர் மற்றும் வடிகாலுக்காக | 6.00% |
| 3 | விளக்குகளுக்காக | 2.00% |
| 4 | துப்புரவுக்காக | 2.50% |
| 5 | கல்வி வரி | 2.50% |
| | **மொத்தம்** | 15.50% |

எனவே மேற்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள சொத்துவரி சதவீத கூற்றிற்கும், ஈரோடு மாவட்ட அரசிதழில் வெளியீடு செய்வதற்கும், விளம்பரச்செலவினம் மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.30,000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.823/2023/அ1)**

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மன்றம்அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :** 203

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.02</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் பள்ளி மேம்பாட்டு மானியம் – மூலதன பணி (Infrastrcture Work) 2023–2024–ன் கீழ் இந்நகராட்சிக்கு சொந்தமான ஜவஹர் மெயின் ரோடு நகராட்சி துவக்கப்பள்ளியில் நான்கு புதிய வகுப்பறைகள் (2+2) மற்றும் கழிப்பறை கட்டுதல் பணிக்காக 13.12.2023 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான ஜவஹர் மெயின் ரோடு நகராட்சி துவக்கப்பள்ளியில் நான்கு புதிய வகுப்பறைகள் (2+2) மற்றும் கழிப்பறை கட்டுதல் பணி | 83.00 இலட்சம் | திரு.சி.பி.கோபாலகிருஷ்ணன், சென்னிமலை | 0.09% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | AVK & CO, பவானிசாகர் | 3.14% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினைவிட 0.09% குறைவாக வழங்கியுள்ள திரு.சி.பி.கோபாலகிருஷ்ணன், சென்னிமலை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.841/2023/இ1)**

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 204**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.03</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.26467/2021/Amrut–1–2 நாள்.12.01.2024–ல் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18, சர்வே எண்.15/1–ல் உள்ள இடத்தில் ஏற்கனவே உள்ள நீர்நிலையை புனரமைப்பு செய்தல் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**ரூ.இலட்சத்தில்**

| வ.எண் | பணியின்பெயர் | மதிப்பீட்டுத் தொகை | GOI Share | GOTN Share | ULB Share |
|---|---|---|---|---|---|
| 1 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18, சர்வே எண்.15/1–ல் உள்ள இடத்தில் ஏற்கனவே உள்ள நீர்நிலையை புனரமைப்பு செய்தல் பணி | 9.00 | 4.00 | 2.00 | 3.00 |

மேற்கண்டவாறு தேர்வு செய்து வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், மேலும் நகராட்சியின் பங்குத்தொகை ரூ.3.00 இலட்சத்தை மேற்கண்ட பணிக்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1810/2022/இ1)**

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்** : 205

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண்.04</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.21335/2015/எம்2 நாள்.24.11.2023–ன் படி இந்நகராட்சிக்குட்பட்ட உள்ளாட்சிகளுக்குட்பட்ட பகுதிகளில் மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாம் நடைபெற்ற மண்டபம் ஆகிய இடங்களுக்கு போதிய கணினிகள், இணையதள வசதி, பந்தல்(சாமியானா), ஆட்டோ விளம்பரங்கள், பிளக்ஸ் பேனர், துண்டு பிரசுரங்கள் மற்றும் அடிப்படை வசதிகள் செய்து தர ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்பட்டது. தற்போது கூடுதல் செலவினம் ஏற்படுவதால் கூடுதல் உத்தேச செலவினம் ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1345/2023/அ4)**

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண்** : 206

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண்.05</u>

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் பள்ளி மேம்பாட்டு மானியம் – மூலதன பணி (Infrastrcture Work) 2023–2024–ன் கீழ் இந்நகராட்சிக்கு சொந்தமான ஜவஹர் மெயின் ரோடு நகராட்சி துவக்கப்பள்ளியில் நான்கு புதிய வகுப்பறைகள் (2+2) மற்றும் கழிப்பறை கட்டுதல் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.25741/2023/SS2 நாள்.26.10.2023–ன் படி ரூ.83.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்கண்ட வகுப்பறைகள் கட்ட ஏதுவாக மேற்படி பள்ளியில் ஏற்கனவே உள்ள 60 வருடங்கள் பழமையான கட்டிடத்தினை ஏலம் முறையில் இடித்து அப்புறப்படுத்த நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களால் 12.01.2024 அன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி கட்டிடத்தினை ஏலம் முறையில் இடித்து அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.841/2023/இ1)**

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 207**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.06**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான ஜவஹர் மெயின் ரோடு நகராட்சி துவக்கப்பள்ளியில் வடக்கு பார்த்து அமைந்துள்ள 60 வருடங்கள் பழமையான பழுதடைந்த ஓட்டுவில்லை வகுப்பறையினை இடித்து அப்புறப்படுத்துதல் பணிக்கு 31.01.2024 அன்று பொது ஏலம் நடத்தப்பட்டது. இந்நிலையில் பொது ஏலத்தில் கலந்து கொண்டு ஏலம் கோரியவர்களின் விபரங்கள் மற்றும் ஏலத்தொகை பின்வருமாறு

| வ.எண் | ஏலதாரரின் விபரம் | உயர்ந்தபட்ச ஏலத்தொகை |
|---|---|---|
| 1 | திரு.சி.சிதம்பரம்,<br>ஒப்பந்ததாரர்,<br>281, சுல்தான் ரோடு,<br>புன்செய்ப் புளியம்பட்டி. | ரூ.60,180/-<br>(சரக்கு மற்றும் சேவை வரி 18% உட்பட) |
| 2 | திருமதி.ந.புனிதவதி,<br>ஒப்பந்ததாரர்,<br>அவினாசி ரோடு,<br>நொச்சிக்குட்டை | ரூ.59,500/-<br>(சரக்கு மற்றும் சேவை வரி 18% உட்பட) |

மேற்படி பொது ஏலத்தில் உயர்ந்தபட்ச ஏலத்தொகையாக ரூ.60,180/- (சரக்கு மற்றும் சேவை வரி 18% உட்பட) கோரியுள்ள திரு.சி.சிதம்பரம், புன்செய்ப் புளியம்பட்டி அவர்களின் ஏலத்தொகையை ஏற்று பணி ஆணை வழங்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.841/2023/இ1)**

**அலுவலகக்குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் : 208**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.07**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மின்மோட்டார்கள், ஸ்டாட்டர்கள், அண்ணாநகர் நீருந்து நிலையத்தில் உள்ள மின்மோட்டார்கள் மற்றும் நகராட்சி பகுதிகளில் உள்ள மின்மோட்டார்கள், ஆழ்துளை கிணற்றின் மின்மோட்டார்கள், நகராட்சி கட்டிடங்களில் உள்ள மின்சாதனப் பொருட்கள், பொதுக்கழிப்பிடங்களில் உள்ள மின்சாதனப்பொருட்கள் ஆகியவற்றின் பழுதுகள் சரிசெய்யவும், ஏப்ரல் 2024 முதல் ஜூலை 2024 வரை உள்ள 4 மாத காலத்திற்கு பராமரிப்பு பணி மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுதொகை ரூ.3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.116/2024/இ1)**

**அலுவலககுறிப்பு :**

அ) மன்றம்அனுமதிக்கலாம்.

ஆ) இப்பணியினை 2024-2025 ஆம் ஆண்டின் திட்ட மதிப்பில் குடிநீர் நிதியிலிருந்து பணிமேற்கொள்ள அனுமதிக்கலாம்.

இ) நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண்** : 209

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண்.08</u>

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள பிரதான குழாய்கள், வால்வுகள், தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து வரும் பிரதான குழாய்கள், ஏர்வால்வுகள் ஆகியவற்றின் பழுதுகள் மற்றும் குழாய் உடைப்புகள் சரிசெய்யவும், ஏப்ரல் 2024 முதல் ஜூலை 2024 வரை உள்ள 4 மாதகாலத்திற்கு பராமரிப்பு பணி மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.111/2024/இ1)**

**அலுவலககுறிப்பு :**

அ) மன்றம்அனுமதிக்கலாம்.

ஆ) இப்பணியினை 2024-2025 ஆம் ஆண்டின் திட்ட மதிப்பில் குடிநீர் நிதியிலிருந்து பணிமேற்கொள்ள அனுமதிக்கலாம்.

இ) நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண்** : 210

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண்.09</u>

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பிரதான குழாய்கள் மற்றும் விநியோககுழாய்கள் ஆகியவற்றின் பழுதுகள் மற்றும் குழாய் உடைப்புகள் சரிசெய்யவும், ஏப்ரல் 2024 முதல் ஜூலை 2024 வரை உள்ள 4 மாதகாலத்திற்கு பராமரிப்புபணி மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.112/2024/இ1)**

**அலுவலககுறிப்பு :**

அ) மன்றம்அனுமதிக்கலாம்.

ஆ) இப்பணியினை 2024-2025 ஆம் ஆண்டின் திட்ட மதிப்பில் குடிநீர் நிதியிலிருந்து பணிமேற்கொள்ள அனுமதிக்கலாம்.

இ) நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண்** : 211

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

<u>**பொருள் எண்.10**</u>

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான பவானிசாகர் மற்றும் அண்ணாநகர் நீரேற்று நிலையங்களில் குடிநீர் பராமரிப்பு பணிக்காக பத்து நபர்களை தனியார் மூலமாக பணி அமர்த்திகொள்ளும் பணிக்கு திரு.வி.ஜெயராஜ் என்பவருக்கு நிபந்தனைகளுக்கு உட்பட்டு இவ்வலுவலக செயல்முறை உத்திரவு ந.க.எண்.இ1/387/2017 நாள்.27.05.2020ல், 01.06.2020 முதல் 31.05.2021 வரை ஓராண்டு ஒப்பந்தகாலத்திற்கு நீட்டித்து பணி ஆணை வழங்கப்பட்டது. குடிநீர் விநியோக பணி அத்தியாவசிய பணி என்பதால், இப்பணியின் அவசர அவசியம் கருதி தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.வி.ஜெயராஜ் என்பவருக்கு பழைய விலைவிகிதத்தில் 01.01.2024 முதல் 31.03.2024 வரையுள்ள மூன்று மாத காலத்திற்கு ஒப்பந்தகாலத்தை நீட்டித்து பணி ஆணை வழங்கப்பட்டது. தற்போது மேற்கண்ட ஒப்பந்தகாலம் 31.03.2024 உடன் முடிவடைவதால் குடிநீர் விநியோக பணி அத்தியாவசிய பணியாக உள்ளதாலும், பாராளுமன்ற உறுப்பினர் தேர்தல் வர இருப்பதால் புதிய ஒப்பந்தப்புள்ளி கோர காலதாமதம் ஆகும் என்பதால் தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.வி.ஜெயராஜ் என்பவருக்கு பழைய விலை விகிதத்தில் மேலும் 01.04.2024 முதல் 30.06.2024 வரையுள்ள மூன்று மாதகாலத்திற்கு ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்து குடிநீர் விநியோக பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.387/2017/இ1)**

**அலுவலககுறிப்பு:-**

அ) மன்றம்அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 212**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

<u>**பொருள் எண்.11**</u>

இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் எண்.TN 36 AX 3912–ன் ஆயுள் காப்பீடு ஆனது 29.01.2024 உடன் முடிவடைய உள்ளதால் அதனை புதுப்பிக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.13,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.052/2024/இ1)**

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் : 213**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

<u>**பொருள் எண்.12**</u>

இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2.0 2022–2023ன் கீழ் ரூ.663.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சி பகுதியில் உள்ள குடியிருப்பு மற்றும் வணிக பகுதிகளில் இருந்து வெளியேறும் கழிவுநீரை கசடு கழிவு அகற்றும் முறையில் அகற்றுதல் பணி மற்றும் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் பணிக்கு (STP cum FSTP) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.9192/2022/SBM1 நாள்.15.03.2023–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்கண்ட பணிக்கு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தில் அனுமதி பெறுவதற்கான கட்டணம் ரூ.35,000/–ஐ தனியார்

கலந்தாலோசகரான CLEAR TECH ENVIROINMENTAL SOLUTIONS என்ற நிறுவனத்தாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.013/2023/இ1)**

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் : 214**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.13</u>**

இந்நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு மானியம் 2023–2024ன் கீழ் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சிக்குட்பட்ட நுண்ணுயிரி உரமாக்கல் மையத்தில் குப்பைகளை எரிப்பதற்காக (Capacity 2.0 Mt Per Day For Incineration Of Non – Recyclable Waste) புதிதாக Incinerator (1 No) நிறுவுதல் பணிக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.1382/2023/பி1 நாள்.08.09.2023–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்கண்ட பணிக்கு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தில் அனுமதி பெறுவதற்கான கட்டணம் ரூ.35,000/–ஐ தனியார் கலந்தாலோசகரான CLEAR TECH ENVIROINMENTAL SOLUTIONS என்ற நிறுவனத்தாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.577/2023/இ1)**

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் : 215**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.14</u>**

இந்நகராட்சியில் அம்ரூத் 2.0 2022–2023ன் கீழ் ரூ.5207.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் குடிநீர் திட்ட அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் பணிக்கு அரசாணை (நிலை) எண்.125, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.09.09.2022–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்நகராட்சிக்குட்பட்ட சத்தியமங்கலம் – கோயம்புத்தூர் மெயின் ரோட்டில் KM.271/065 முதல் KM.274/065(RHS) மற்றும் KM.271/140 முதல் KM.273/995(LHS) வரையுள்ள பகுதியில் குடிநீர் பிரதான குழாய் பதிக்க தேசிய நெடுஞ்சாலைத்துறை, கோபிசெட்டிபாளையம் அவர்களிடம் அனுமதி பெற திட்ட மதிப்பீடு தயார் செய்தல் பணிக்கான கட்டணம் ரூ.77,075/–ஐ தனியார் கலந்தாலோசகரான M.M.CONSULTANCY, ERODE என்ற நிறுவனத்தாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1299/2020/இ1)**

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் :** 216

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.15</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான 11 சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் 4 பொது கழிப்பிடங்களை 2024–2025ஆம் ஆண்டிற்கான ஆண்டு பராமரிப்பு மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.40 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.113/2024/இ1)**

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் :** 217

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.16</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.15, வாரச்சந்தை பகுதியில் உள்ள நுண்ணுயிர் உரமாக்கல் மையத்திற்கு 2024–2025ஆம் ஆண்டிற்கான ஆண்டு பராமரிப்பு மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.60 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.114/2024/இ1)**

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் :** 218

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.17</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் அலுவலக பயன்பாட்டிற்காக புதிதாக கட்டப்பட்ட அறைக்கு தேவையான மின்சார வசதி, குடிநீர் வசதி, செப்டிக் டேங்க் மற்றும் கைபிடி சுவர் ஆகியவை அமைக்கவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.115/2024/இ1)**

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் :** 219

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.18</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.12, காந்திநகர் பகுதியில் அமைந்துள்ள சமுதாய கூடத்தை புனரமைப்பு செய்யவும், புதிதாக சமையற்கூடம் கட்டுதல் பணிக்கும் ஆகும் செலவினம் ரூ.4.85 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.130/2024/இ1)**

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் :** 220

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.19</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள தகுதியான சேவை வழங்குபவர்/முகமை/ஒப்பந்ததாரர்/நிறுவனம் தேர்வு செய்தல் பணிக்கு இருஉறை முறையில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் செய்தி விளம்பரம் செய்தித்தாளில் 50 சதுர சென்டி மீட்டர் அளவிற்கு மிகாமல் செய்தித்தாளில் அறிவிப்பினை சுதா ஆட்ஸ் திருப்பூர் அவர்களின் நிறுவனத்திலிருந்து ஒப்பந்த அழைப்பு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் பணிக்கு அந்நிறுவனத்திடமிருந்து பட்டியல் தொகை வரப்பெற்றுள்ளன. தினசரி நாளிதழில் வெளியீடு செய்தமைக்கான பட்டியல் தொகை ரூ.23678/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1316/2021/எச்1)**

**அலுவலகக் குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கைக்கு மன்றம் அனுமதி ஏற்கலாம்

**தீர்மான எண் :** 221

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**.

**<u>பொருள் எண்.20</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளில் முதிர்ந்த ஏய்டிஸ் கொசுப்புழு ஒழிப்புப் பணிக்காக DBC பணியாளர்கள் பணி புரிந்து வருகின்றனர். இப்பணியாளர்கள் வீடு வீடாக சென்று கொசுப்புழு உருவாகும் கலன்களை கண்டறிந்து அழிக்கும் பணியினை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் நிலையான கீழ்நிலை நீர் தேக்கத் தொட்டி, மேல் நிலை நீர்தேக்கத் தொட்டிகளில் நீரில் உள்ள டெங்கு கொசுப்புழுக்களை அழிப்பதற்கு அபேட் மருந்து அவசியமாகிறது மற்றும் இந்நகராட்சியில் உள்ள பள்ளி மாணவ, மாணவிகள் மற்றும் பொது இடங்களான அம்மா உணவகம், பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்காக நிலவேம்பு குடிநீர் வழங்க வேண்டியுள்ளது. இதற்கு, நிலவேம்பு சூரணம் தேவை அதிகமாக இருப்பதாலும் பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி அபேட் (Temephos), நிலவேம்பு பொடி மற்றும் சுகாதாரப் பணிக்காக வார்டு பகுதிகளில் பயன்படுத்தப்படும்

பிளிசிங் பவுடர், சுண்ணாம்பு பவுடர், கருப்பு பினாயில், வெள்ளை பினாயில், ஆசிட் ஆகியவற்றை கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1357/2023/எச்1)**

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 222**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண்.21</u>

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியின் பொறியியல் பிரிவில் இயங்கும் TN36 AX 3912 ஈப்பு வாகனம் வாங்கப்பட்டு 10 வருடங்கள் கடந்துள்ள காரணத்தால் மேற்கண்ட வாகனத்திற்கு உள்ள இருக்கைகள் மேற்கூரைகள் மற்றும் இதர உதிரி பாகங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளதை பழுது மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.175 நாள்.31.10.2023 அன்று அனுமதி வழங்கப்பட்டு பழுது பணிகள் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்ட நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம்

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | Koyas and sons, Auto and Machiner Equipment Company and AMECO Liners | Rs.1,19,980/- |
| 2 | AMECO Enterprises Coimbatore | Rs.1,26,475/- |
| 3 | AMECO Agencies, Coimbatore | Rs.1,34,633/- |

மேற்கண்ட வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திருவாளர் Koyas and sons, Auto and Machiner Equipment Company and AMECO Liners என்ற நிறுவனத்திற்கு பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 1273/2023/இ1)**

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 223**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண்.22</u>

புன்செய் புளியம்பட்டி நகராட்சி பகுதிகளில் உள்ள 18 வார்டுகளிலும் டெங்கு பணிகள் மற்றும் கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ள புதிதாக புகை மருந்து அடிக்கும் இயந்திரம் இரண்டு வாங்கிக் கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.200000/- (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) கொள்முதல் செய்து கொள்ள நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்.1092/2023/H1**

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்த புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் : 224**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.23</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பொதுநிதி 2023-2024-ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான கழிவுநீர் வாகனம் (TN 36 AZ 7382) பழுது நீக்கம் செய்யும் பணிக்காக 02.02.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்படத்தில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதின் அடிப்படையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விலை விகித பட்டியில் உரை 02.02.2024 அன்று வரப்பெற்ற ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்பட்டு மதிப்பிட்டுடன் ஒப்புநோக்கியத்தில் கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.

| **வ. எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **விழுக்காடு** |
|---|---|---|---|---|
| 1. | **பொதுநிதி 2023-2024**<br>புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான கழிவுநீர் வாகனம் (TN 36 AZ 7382) பழுது நீக்கம் செய்யும் பணி | ரூ.1.50 இலட்சம் | முருகன் ஆட்டோஸ், ஈரோடு | 3.33% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| | | | ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார்ஸ், ஈரோடு | 1.46% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |

வரப்பெற்ற விலைப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 1.46% குறைவாக வழங்கியுள்ள **ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார்ஸ், ஈரோடு** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1551/2023/எச்1)**

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் : 225**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.24**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பொதுநிதி 2023–2024–ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி வார்டு பகுதிகளில் டெங்கு பணிகள் மற்றும் கொசு ஒழிப்பு பணியை மேற்கொள்ள புதிதாக இரண்டு எண்ணிக்கையில் கொசு மருந்து அடிக்கும் இயந்திரம் கொள்முதல் செய்யும் பணிக்காக 02.02.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்படத்தில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதின் அடிப்படையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விலை விகித பட்டியில் உறை 02.02.2024 அன்று வரப்பெற்ற ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்பட்டு மதிப்பிட்டுடன் ஒப்புநோக்கியத்தில் கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.

| வ. எண் | பணியின்பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | **பொதுநிதி 2023–2024**<br>புளியம்பட்டி நகராட்சி வார்டு பகுதிகளில் டெங்கு பணிகள் மற்றும் கொசு ஒழிப்பு பணியை மேற்கொள்ள புதிதாக இரண்டு எண்ணிக்கையில் கொசு மருந்து அடிக்கும் இயந்திரம் கொள்முதல் செய்யும் பணி | ரூ.2.00 இலட்சம் | அமுதா ஏஜென்சிஸ், கோவை | 17.12% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| | | | கிரீன்பாக் டிரேடர்ஸ், கோவை | 18.24% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |

வரப்பெற்ற விலைப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 18.24% குறைவாக வழங்கியுள்ள **கிரீன்பாக் டிரேடர்ஸ், கோவை** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வேண்டப்படுகிறது.

(**ந.க.எண்.1092/2023/எச்**1)

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர்மன்ற தலைவர் அவர்களின்முன்அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் : 226**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.25**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி வாரச்சந்தையில் அமைந்துள்ள உரக்கிடங்கில் சேகாரம் ஆகும் பிளாஸ்டிக் கழிவுகளை SAN CONSTRUCTION, COIMBATORE என்ற நிறுவனத்தால் லாரி மற்றும் ஜேசிபி இயந்திரத்தின் மூலமாக அகற்றி அல்ட்ரா டெக் சிமெண்ட் ஆலைக்கு அனுப்பப்பட்டு வருகிறது. தற்போது உரக்கிடங்கில் 20 டன் அளவிற்கு பிளாஸ்டிக் குப்பைகள் தேங்கி உள்ளது. மேலும், வரும் காலங்களில் சேகாரம் ஆகும் பிளாஸ்டிக் குப்பைகளை அல்ட்ரா டெக்

சிமெண்ட் ஆலைக்கு அனுப்ப வேண்டியுள்ளதால் தற்போது பணி மேற்கொள்ளப்பட்டு வரும் SAN CONSTRUCTION, COIMBATORE என்ற நிறுவனம் மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1050/2023/எச்1)**

**அலுவலககுறிப்பு**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் : 227**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.26</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பொது நிதி 2023–2024ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி வார்டு பகுதிகளில் பொது சுகாதார பணிக்காக ப்ளீச்சிங் பவுடர், சுண்ணாம்பு பவுடர், வெள்ளை பினாயில், கருப்பு பினாயில், ஆசிட், நிலவேம்பு பொடி மற்றும் அபேட் தண்ணீர் தொட்டி மருந்து விநியோகம் செய்யும் பணிக்காக 18.12.2023 அன்று முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி வார்டு பகுதிகளில் பொது சுகாதார பணிக்காக ப்ளீச்சிங் பவுடர், சுண்ணாம்பு பவுடர், வெள்ளை பினாயில், கருப்பு பினாயில், ஆசிட், நிலவேம்பு பொடி மற்றும் அபேட் தண்ணீர் தொட்டி மருந்து விநியோகம் செய்யும் பணி | ரூ.7.00 இலட்சம் | Kumar Enterprises, No.8, Patabad 4th Street, Patabad, Coimbatore–641012 | 12.53% மதிப்பீட்டை விட அதிகம் |
| | | | Go Green Enterprises, 958/A, Opp G.P Hosiptal, Coimbatore–641012 | 30.24% மதிப்பீட்டை விட அதிகம் |
| | | | UK Enterprises, 7/A, Lakshmipuram, Ganapathy, Coimbatore–641006 | 10.25% மதிப்பீட்டை விட குறைவு |

வரப்பெற்ற விலைப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 10.25% குறைவாக வழங்கியுள்ள UK Enterprises, 7/A, Lakshmipuram, Ganapathy, Coimbatore–641006 அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1357/2023/எச்1)**

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் : 228**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.27</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பொது சுகாதாரபிரிவு மற்றும் பொறியியல் பிரிவில் தொடர்ச்சியாக பராமரிப்பு பணிகள், துப்புரவு பணிகள் மேற்கொள்ள ஜே.சி.பி வாகனம் வாடகைக்கு எடுத்து பயன்படுத்த வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. இதனால் நகராட்சிக்கு வருடத்திற்கு சுமார் ரூ.6.00 முதல் ரூ.8.00 இலட்சம் வரை செலவாகிறது. எனவே மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள ஏதுவாக நகராட்சிக்கு சொந்தமாக புதிதாக ஒரு ஜே.சி.பி வாகனம் கொள்முதல் செய்துகொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1273/2023/இ1)**

**அலுவலகக்குறிப்பு :—**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 229**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.28</u>**

அரசாணை எண்.125, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.09.09.2022—ன் மூலம் ஈரோடு மாவட்டம், புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் குடிநீர் திட்ட அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள ரூ.52.07 கோடி நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிடப்பட்டது. அதனை தொடர்ந்து தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களால் கடந்த 12.10.2022 அன்று மேற்கண்ட பணிக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டது. மேற்கண்ட திட்டத்தின் கீழ் 10.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட 5 புதிய மேல்நிலை நீர்தேக்கத்தொட்டிகள் கட்டுதல், பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் 5.00 MLD கொள்ளளவு கொண்ட ஒரு புதிய குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல், பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி வரை புதிதாக பிரதான குடிநீர் குழாய் அமைத்தல் மற்றும் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதிதாக பகிர்மான குழாய் பதித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அனைத்து குடியிருப்புகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் தனி நபர் வீட்டு குடிநீர் இணைப்பு அல்லாதோர் மேற்கண்ட திட்டத்தின் மூலமாக புதிய குடிநீர் இணைப்பு பெற சிறப்பு சலுகை அடிப்படையில் வைப்புத்தொகை மட்டும் ரூ.4000/—ஐ ஒரே தவணையாகவோ அல்லது இரண்டு தவணைகளாகவோ நகராட்சியில் செலுத்தி விண்ணப்பித்து புதிய குடிநீர் இணைப்பு பெற்று கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட திட்டத்தினை இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து பொதுமக்களுக்கும் கொண்டு சேர்க்க ஏதுவாக அறிவிப்பு மற்றும் விளம்பரம் செய்யவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1299/2020/இ1)**

**அலுவலகக்குறிப்பு :—**

அ) மன்றம்அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 230**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.29</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட வணிக வளாக கடைகளுக்கு 2023–2024 முதல் 2026–2027 வரை உள்ள மூன்றாண்டு காலத்திற்கு 16.11.2023 மற்றும் 24.01.2024 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. மேற்படி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்தபட்ச தொகையாக ஏலம் கோரிய கீழ்க்கண்டுள்ள நபர்களுக்கு உரிமம் வழங்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | உரிமம் விவரம் | தற்போது ஏலத்தில் உயர்ந்த கேள்வி கேட்ட ஏலதாரர்களின் பெயர் | அரசு மதிப்பு தொகை | பொது ஏலத்தில் கேட்கப்பட்ட உயர்ந்த ஏலக் கேள்வி தொகை |
|---|---|---|---|---|
| 1 | திரு.வி.க,திடல் வணிக வளாக கடை எண். 4A | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் : ஆர்,கோபால் | 3300/– | 3500/– |
| 2 | ஜவகர் மெயின் ரோடு கடை எண்.25 | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் : கஜானந்தா ஜிவல்லரி, மார்ட் இந்தியா பிரைவேட் லிமிடெட். | 12750/– | 13000/– |

**(ந.க.எண்.1135/2023/அ1)**

**அலுவலக குறிப்பு:**

மேற்கண்ட குத்தகை இனங்களில் வரிசை எண்.1 மற்றும் வரிசை எண்.2இல் அரசு மதிப்பை விட உயர்ந்தபட்ச ஏல தொகை கோரப்பட்டதால் ஒப்பந்ததாரருக்கு உரிமம் வழங்கலாம்.

**தீர்மான எண் : 231**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**(ஓம்)திரு.தி.ஜனார்த்தனன்,**
**நகர்மன்ற தலைவர்**
**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி**

**//உண்மைநகல் உத்தரவுப்படி//**

**ஆணையாளர்(மு.கூ.பொ)**
**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி**